ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய நிகழ்ச்சித் திட்டத்திற்கான மிக அண்மையில் சேர்க்கப்பட்ட மாவட்டம் மொனருகலை மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்படுத்தல் 1984 இன் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப் பட்டது. செயற்றிட்டத்தின் காலம் 3 ஆண்டுகளாகும். நிகழ்ச்சித் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 1,700 இலட்சமாகும். இது அபிவிருத் திக்கான நோர்வே உதவியினால் நிதியிடப்படும். 1984 இல் செயற்றிட்டக் காலத்தின்மீதிக் காலத்தில் மிக விரைவானதும் ஆற்றல் மிக்கதுமான செயற்படுத் துதலுக்கு வசதியளிக்கும்பொருட்டு மாவட்ட திட்டமிடலின் நிறுவன ரீதியான திறமையினை முன்னேற்றுவதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

## தொழில் நிலை

தொழில்நிலை 1984 இல் அரசதுறையில் அதிகரித்துள்ளதையும் அரசுசார் துறையில் வீழ்ச்சியடைந்துள்ளதையும் கிடைக்கக்கூடிய தரவுகள் காட்டுகின்றன. நகர தனியார் துறையிலும் நன்கமையாத கிராமியத் துறையிலும் தொழில்நிலை அதிகரித்துள்ளமைக்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

அரசதுறையில் தொழில்நிலை 1983 இல் மதிப்பிடப்பட்ட 1 சதவீதத்திற்கும் குறைவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ஏறத்தாழ 5,200 ஆல் அல்லது 1.2 சதவீதத்தால் அதிகரித்ததை ஆரம்ப மதிப்பீடுகள் காட்டுகின்றன. பின்வரும் துறைகளின் தொழில்நிலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. அவை நீர்ப்பாசன வடிகால் அமைப்பு வேலைகளின் நிர்மாணம், அபிவிருத்தி ஆகியன, குடியேற்றப் பகுதிகளில் காணி அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு உற்பத்தி, உள்ளூராட்சி, சட்ட நடைமுறைப்படுத்தல், பாதுகாப்பு, சுங்கப் பணிகள் என்பனவாகும்.

அரசுசார் நிறுவனங்களில் தொழில்நிலை 1983 இன் சிறு அதிகரிப்பான 0.2 சதவீதத்திற்கு மாறாக 1984 இல் 2.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெரும்பாலான அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை பெருந்தோட்டத்துறை உட்பட, செலவுகளைக் குறைக்கும் நோக்கில் ஏற்றுக் கொண்ட மறுசீராக்கக் கொள்கைகளின் முக்கிய காரணமாக 1984 இல் வீழ்ச்சியடைந்தது.

ஊழியர் சேமநிதியத்துடனான செயற்படு கணக்குகளை அடிப்படையாகக் கொண்ட இறுதி மதிப்பீடுகள் 1984 இல் நன்கமைந்த தனியார் துறை தொழில் நிலைக்கு இல்லாத வேளையில் தனியார் துறை தொழில்நிலையின் பொதுவான போக்குகளை இனங்காண்பதற்கு வேறு சில குறிகாட்டிகள் பயன்படுத்தப்படலாம். பொதுவான நியதிகளில் தனியார் கைத்தொழில் துறை மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் அதன்வளர்ச்சி வேகத்தினை 26 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்ததன் மூலம் பேணியது. துணைத்துறைகள் ரீதியான உற்பத்தியின் பகுப்பு முக்கிய தொழில் வாய்ப்பினை வழங்கும் துறைகளில் ஒன்றான ஆடைகளும் புடவைகளும் வகை 1984 இல் 53 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததைக் காட்டுகின்றது. மத்திய வங்கியின் கைத்தொழில் அளவையின் அடிப்படையில் தனியார்துறைக் கைத் தொழில்களின் தொழில்நிலை முன்னைய ஆண்டின் 8 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி, திட்டமிடல் அமைச்சினால் நடாத்தப்பட்ட கள அளவையொன்றினால் சேகரிக்கப் பட்ட தகவல்கள் வெளிநாட்டு முதலீட்டு மதியுரை ஆணைக்குழு 1983 யூன் இறுதியின் 26,944 ஆட்களுடன் ஒப்பிடுகையில் 1984 யூன் இறுதியில் நேரடித் தொழில் வாய்ப்புக்களை 36,625 ஆட்களுக்கு வழங்கின என்பதனைக் காட்டு கின்றன. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சி

களில் நேரடி தொழில் நிலையின் மொத்த எண்ணிக்கை 1983 இன் 26,055 ஆட்களுடன் ஒப்பிடுகையில் 1984 இறுதியில் 29,251 ஆட்களாக விளங்கியது.

1984 இல் கிராமிய வேளாண்மை துறையில் சார்புரீதியில் முன்னேற்றமான செயலாற்றம் காணப்பட்டமை இத்துறையில் அதிகரித்த தொழில் வாய்ப்பினை அல்லது கீழுழைப்பில் வீழ்ச்சியினைக் காட்டியது.

## விலைகள்

1984 இல் சில்லறை விலை அசைவுகளின் முக்கிய பண்பு ஆண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பினைத் தொடர்ந்து பின்னரைப் பகுதியில் குறிப்பிடத்தக்க மெச்சத்தக்க வீழ்ச்சியைக் கொண்டிருந்தமையாகும். ஆண்டின் பிற்பகுதியிற் காணப்பட்ட விலைகளின் வீழ்ச்சி 1983 இன் இதே காலப்பகுதியில் அவதானித்த விலைப்போக்கிற்குக் குறிப்பிடத்தக்களவில் மாறுபட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1983 இன் 14 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 17 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தபோதிலும் 1984 திசெம்பர் இறுதியில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 9 சதவீதமாக மட்டும் காணப்பட்டது. 1983 இன் 21 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது ஒரு மிதமான அதிகரிப்பாகும். இதேபோல் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 25 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 26 சதவீதத்தால் அதிகரித்தபோதிலும் புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் அதிகரிப்பு 1984 திசெம்பரில் 5 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரிப்புக்கான முக்கிய காரணி உணவுக்கான துணைச் சுட்டெண் 18.1 சதவீதத்தால் (61.9 சதவீத அளவு) அதிகரித்தமையேயாகும். எரிபொருளும் வெளிச்சமும், உடை, பல்வகை விடயங்கள் போன்ற ஏனைய துணைச் சுட்டெண்களின் அதிகரிப்புக்கள் முன்னைய ஆண்டின் 33.2 சதவீதம், 6.3 சதவீதம், 15.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முறையே 17.9 சதவீதம், 5.6 சதவீதம், 14.6 சதவீதமாக விளங்கின.

பாதகமான வானிலைநிலைமைகள், நிருவாக விலைத் திருத்தங்கள், உள்நாட்டுச் சந்தை மீதான உயர் ஏற்றுமதி விலைகளின் தாக்கம் ஆகியன 1984 இன் முற்பகுதியில் உணவு விலைகளின் கடுமையான அதிகரிப்புக்குப் பங்களித்த காரணிகளாகும். சனவரியில் அரிசி, கோதுமை மா, பாண் ஆகியவற்றின் விலைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. உயர் மழைவீழ்ச்சியினால் ஏற்பட்ட பயிர் அழிவு அரிசி, காய்கறி, மற்றும் மிளகாய், சின்ன வெங்காயம் போன்ற ஏனைய உணவு விடயங்களின் திறந்த சந்தை விலைகள் ஆண்டின் முதலரைப் பகுதியில் அதிகரிப்பை ஏற்படுத்தின. 1983 இன் இறுதிப் பகுதியில் அதிகளவில் உயர்வடைந்த தெங்குப் பொருட்களின் விலைகள் 1984 இன் முதல் காலாண்டில் தொடர்ந்தும் உயர்வடைந்தன. ஆண்டின் முதலரைப் பகுதியில் தேங்காய் எண்ணெய் விலைகளும் உயர் மட்டத்தில் இருந்தன.

தெங்கு, தேங்காயெண்ணெய், காய்கறிகள் போன்ற சில முக்கிய பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தமை 1984 இன் இரண்டாம் காலாண்டில் காணத்தக்க பண்பாக இருந்தது. சுட்டெண்ணின் மாதாந்த அதிகரிப்பு வீதம் பெப்புருவரியில் இருந்து செத்தெம்பர் வரை படிப்படியாக வீழ்ச்சியுற்று 1977 செத்தெம்பரின் பின்பு முதன் முதலாக இவ்வாண்டு செத்தெம்பரில் வீழ்ச்சியைப்